**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**
**O.S.No.119/2019**

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 25.11.2024**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : காரல்மார்க்ஸ் | ஜாதி | : | |
| த/பெயர் | : துரைக்கண்ணு | மதம் | : | |
| கிராமம் | : | தொழில் | : | |
| வட்டம் | : | வயது | : | |

வா.சா. 1 முன்னிலை 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் குடியிருக்கும் இடத்தை கிரையம் வாங்கியதற்கான கிரைய பத்திரத்தினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் குடியிருக்கும் வீடமான செல்வாநந்தன் நகர் குடியிருப்பு அனுமதி வழுங்கப்பட்டது என்றால் சரிதான். அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனை பிரிவு என்பது குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஒரு மனை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றால் அங்கு ரோடு, பூங்கா போன்ற அத்தியாவசிய தேவைகள் இருந்தால் தான் அங்கீகரிக்கப்படும் என்றால் சரிதான்.

2) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவிலுள்ள ரோடு, பூங்கா ஆகியவற்றை நகராட்சிக்கு தானமாக வழங்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு தானமாக கொடுக்கப்பட்டதற்கு பின்பு ரோடு, பூங்கா ஆகியவற்றிக்கு உரிமையாளர் நகராட்சி என்றாலும், அவற்றின் கட்டுப்பாட்டிற்கு கீழ் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு ரோடு மற்றும் பூங்கா ஆகியவை சம்மந்தமாகவும், ரோடு சம்மந்தமாகவும் நகராட்சி தான் முடிவு செய்யவேண்டும் என்றால் கருத்து கேட்டு அதன்பிறகு தான் செய்வார்கள்.

3) சொத்தை பராமரிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் நகராட்சி உரிமை உள்ளதா என்றால் உரிமை உள்ளது. ஆனால் அவற்றை சட்டத்திற்கு புறம்பாகவும், தவறாவும் பயன்படுத்தக்கூடாது. ஆனால் சட்டத்திற்குட்பட்டு செய்யலாம். நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்தவற்கு உரிமை உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் அந்த தெருவாசிகளிடம் கருத்து கேட்கவேண்டும். பொதுவாக நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்தவற்கு அதிகாரம் உள்ளது என்றால் இல்லை.

நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்யக்கூடாது என்பது தொடர்பான சட்டப்பிரிவுகள் குறித்து நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை.(வாதி தரப்பில் சட்டப்பிரிவுகள் தொடர்பாக தெரியுமா என்று கூறி கேள்விகேட்க முடியாது என்று ஆட்சேபணை தெரிவித்தார்.) நகராட்சியிலுள்ள நபர்களிடம் கருத்து கேட்ட பிறகு தான் நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை விற்க முடியும் என்பது குறித்து சட்டப்பிரிவுகளோ, நடைமுறைகளோ குறித்து படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நானாகத்தான் கருத்து கேட்கவேண்டும் என்று சொல்கிறேன். செல்வானந்தன் நகர் மனை பிரிவு தொடர்பாக வரைபடத்தை பார்த்து தான் சாட்சியமளிக்க முடியும் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படுவது நகர் ஊரமைப்புதுறை தஞ்சாவூர் மண்டல மன்னார்குடி நகராட்சியில் உள்ள மனை பிரிவு வரைபடம் என்றால் சரிதான். அது செல்வானந்தன் நகர் மனைப்பிரிவு தொடர்பானது என்றால் சரிதான். இந்த வரைபடம் புதிதாக வழங்கப்பட்டுள்ளது. **(மேற்கண்ட வரைபடம் சாட்சியின் மூலம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) 1ம்** பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். அதில் மனைபிரிவு அங்கீகாரம் தொடர்பாக சொல்லப் பட்டுள்ளது என்றால் சரிதான். சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டு தான் நடைமுறைகள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சட்டவிதிகளுக்குட்பட்டு மனை பிரிவு அங்கீகாரம் பெறப்பட்டது என்பது குறித்து எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.10 1ம் பிரதிவாதி குடும்பத்தால் நகராட்சிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அதில் மனைப்பிரிவு அங்கீகார வரைபடமும் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது புதிதாக வழங்கப்பட்ட வரைபடம் ஆகும். வா..சா.ஆ.10 ஆவணத்தை குறித்து என்னால் தாக்கல் செய்யப்பட்டு எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ள சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தை குறித்து ஆட்சேபணை எதுவும் எனது வழக்குரையிலோ,
நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 2ம் வாதி முத்துப்பாண்டி வீட்டிற்கு பக்கத்தில் பூங்காவிற்கு வடக்கு பக்கம் செல்போன் கோபுரம் உள்ளது என்றால் சரிதான். 3ம் வாதி ஜமுனாமோகன் பூங்காவிற்கு கிழக்கு பக்கத்தில் உள்ளார். பூங்காவிற்கு கிழக்கு பக்கத்தில் தெற்கு வடக்கில் ரோடு உள்ளது என்றால் சரிதான். நான் இருக்கும் பூங்கா பக்கத்தில்லை. புதிதாக போடப்பட்டுள்ள சாலை 2ம் வாதி முத்துப்பாண்டி இடத்திற்கு பக்கத்தில் பாப்பாத்தி என்பவருக்கு சொந்தமான இடம் உள்ளது. அதற்கு பக்கத்தில் தான் ரோடு உள்ளது. அந்த ரோட்டில் தெருவிலுள்ள நபர்கள் சென்று வருகிறார்கள் என்றால் இல்லை. பூங்காவிற்கு மேற்கு பக்கத்தில் தான் 1ம் பிரதிவாதிக்கு

மனைப்பிரிவு உள்ளது. அந்த பக்கத்திலுள்ள மனை பிரிவுகள் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்றால் அதுப்பற்றி சரியாக தெரியவில்லை. 1ம் பிரதிவாதி மனைபிரிவில் 2 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. அந்த இடத்தில் வீடு கட்டுவதற்கு புதிதாக போடப்பட்ட மண் ரோட்டின் வழியாகத்தான் செல்கிறார்கள் என்றால் சரிதான்.பூங்கா பொதுவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதற்குண்டான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் உள்ளது தாக்கல் செய்ய தயராக உள்ளேன். நான் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்தவற்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான்.

சட்டத்திற்குட்பட்டு நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட இடத்தை பொறுத்து ஆட்சேபணை செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தில் வசிக்கும் ஒரு குடிமகனாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் 1ம் பிரதிவாதியிடம் தொகை பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய மனைப்பிரிவை தாண்டி நான் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஆக்கிரமிப்பு தொடர்பாக நகராட்சியில் என் மீது நடவடிக்கை எடுத்தால் அதிலிருந்து தப்பிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தல்ல என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றாலும் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.27 17:47:43 +0530

District Munsif
Mannargudi.